**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 57/2016**

**வாதி தரப்பு சாட்சி–1 சிவபிரகாஷ் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) தாவா சொத்தை பொறுத்து வருவாய்துறை ஆவணங்களை குளித்தலை வட்டாட்சியருக்கு மனு செய்து பார்வையிட்டேனா என்றால் பார்த்தேன். அவ்வாறு நான் பார்வையிட்ட ஆவணங்களின் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்திருக்கிறேன். எனது வீடு மேற்குபுறம் உள்ள காலி இடத்திற்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கே காலியிடம் உள்ளது என்றால், தற்போது காலியிடமாக உள்ளது, நான் வாங்கும் போது அதில் கூரை வீடு இருந்தது. யாரிடம் வாங்கினேன் என்றால், குளித்தலை வட்டாட்சியரிடம் இருந்து பட்டா பெற்று அதில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறேன். மேற்கில் உள்ள இடத்திற்கு கிழக்கில் உள்ள வீடு எனது தகப்பனாருடையது. அவர் தற்போது உயிருடன் இல்லை, எனது முதல் சாட்சிய பிரமாணம் தாக்கல் செய்த போது உயிருடன் இருந்தார் என்றால் சரிதான்.

2) மேற்படி நிலங்கள் அனைத்தும் நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் சரிதான். சர்வே எண் 242/2B எங்குள்ளது என்றால், காலியிடத்திற்கு கிழக்குபுறம் உள்ளது. நான் எனது மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த நிலத்தில் என்ன அடிப்படை ஆவணம் உள்ளது என்றால், எனது பெயரில் பட்டா உள்ளது. எனக்கு பட்டா வழங்கியது குளித்தலை வட்டாட்சியர் என்றும், ஆனால் அந்த இடம் குளித்தலை நலத்துறை வட்டாட்சியருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த அறிக்கைக்கு எங்கள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல்

செய்யப்பட்டதா என்றால் இல்லை. அந்த **நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

3) நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நகல் போட்டு வாங்கிப் பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் நலத்துறை வட்டாட்சியரால் வழங்கப்பட்டது அல்ல என்றால் சரிதான். எனது தகப்பனார் இடத்திற்குத்தான் மின் இணைப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அது எனது வீட்டிற்கான மின் இணைப்பு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள் நான் குடியிருக்கும் வீட்டு வரி ரசீதுகள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கான மின் கட்டண ரசீதுகள்தான் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளந்து பார்வையிடும் போது நில அளவையரும் வந்தார் என்றால் சரிதான். வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில்தான் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனது வழக்கறிஞரிடம் வாங்கி பார்த்தேன்.

4) எனது வழக்கறிஞருக்கு நீதிமன்ற ஆணையர் அறிக்கை எவ்வாறு கிடைத்தது என்றால் அதுபற்றி தெரியவில்லை. எனது வழக்கறிஞர் நகல் மனு தாக்கல் செய்து நீதிமன்ற அறிக்கையை வாங்கினாரா என்றால் அதுபற்றி தெரியாது. எனது வழக்கறிஞரிடம் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நகல் மனு தாக்கல் செய்து வாங்கினீர்களா என கேட்டேனா என்றால் கேட்கவில்லை. எனது வீட்டின் மேற்கே உள்ள காலி மனையில் தென்வடல், கிழமேல் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. காலி மனைக்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. எனது தாயார் பெயரில் மட்டும்தான் ஒரு மின் இணைப்பு உள்ளது. எனது தாயார் பெயரில் உள்ள மின் இணைப்பை காலி இடத்தில் உள்ள குடிசைக்கு பயன்படுத்துவதாக சொல்லும் நிலையில், அவ்வாறு பயன்படுத்த மின்வாரியத்தில் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை.

5) மேற்கே உள்ள காலி இடம் ஆரம்பத்தில் பொது விநியோகக்கடை நடத்த ஒதுக்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல, எனக்கு பட்டா கொடுத்த பின்னிட்டுதான் பொது விநியோகக்கடைக்கு இடம் தேவை என பிரச்சினை செய்தார்கள். நலத்துறை வட்டாட்சியரிடம் மனு கொடுத்து பட்டா வாங்கினேனா என்றால் ஆமாம். அந்த பட்டாவைத்தான் நான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்குபுறம் உள்ள காலியிடத்தை தனிப்பட்ட ஒரு நபருக்கு கொடுக்கவில்லை என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு பட்டா கொடுத்தார்கள். தற்போது பொது மக்கள் அனைவரும் சேர்ந்து பொது நூலகம் கட்ட மேற்குபுறம் உள்ள காலியிடத்தில் முயற்சி செய்கிறார்கள் என்றால் சரிதான்.

6) மேற்குபுறம் உள்ள காலியிடத்தை பொது நூலகம் கட்டுவதற்காகத்தான் நலத்துறை வட்டாட்சியர் ஒதுக்கீடு செய்தார் என்றும், தனிநபருக்காக ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும், மேற்படி இடம் பொதுக்காரியத்திற்காகத்தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்குபுறம் உள்ள காலியிடம் குறித்து எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஊர் பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்தது. மேற்படி பஞ்சாயத்தில் காலியிடத்தை பொதுக்காரியத்திற்கு பயன்படுத்த எங்கள் குடும்பத்திற்கு ஆட்சேபனை இல்லை என சொன்னோம் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் ஒப்புக்கொண்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. ஊர்க்காரர்கள் மேற்படி இடத்தை பொதுக்காரியத்திற்காக வைத்துள்ளார்கள் என்றும், அதை நன்கு தெரிந்து கொண்டே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காலியிடத்திற்கு கிழமேல், தென்வடல் அளவு தெரியுமா என்றால் தெரியாது.

7) நான் குடியிருக்கும் இடத்தையும், காலியிடத்தையும் தனியாக நில அளவையர் மூலம் அளவீடு செய்தேனா என்றால் இல்லை. இரண்டு இடங்களையும் அளவீடு செய்தால் உண்மையான அளவு தெரியும் என்றால்,

நான் பலமுறை அளவீடு செய்ய பணம் கட்டினேன். ஆனால் எனக்கு அளவீடு செய்து கொடுக்கவில்லை. நான் அளவீடு செய்ய கொடுத்த மனுவையோ, பணம் கட்டியதற்கான ரசீதையோ தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. காலியிடத்தை நூலகம் அமைக்க ஆட்சேபனை உள்ளதா என்றால், எனக்கு குடியிருக்க இடம் தேவைப்படுகிறது. காலியிடத்தில் வீடு உள்ளதா என்றால், ஏற்கெனவே இருந்த குடிசையை அடித்து நொறுக்கிவிட்டார்கள். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரையோ, மனு ரசீதையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) காலி இடத்தில் இருந்த குடிசையை அடித்து நொறுக்கியதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காலியிடத்தில் எந்த காலத்திலும் குடிசை இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்தது உண்மையாக இருந்திருந்தால் அதைப்பற்றி வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றும், அது பொய்யானது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கின் விபரம் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**